ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2046/53 - 2017 නොවැම්බර් මස 23 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.11.23

*2046/53 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 23 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: 8/3/5/3/5.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4/3/9/2013/WS/425.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மத்திய மாகாணத்தில், மாத்தளை மாவட்டத்தில், மாத்தளை பிரதேச செயலாளர் பிரிவிலே கம்பஹசிய பத்துவ சிறு பிரிவில், ரஜ்ஜம்மன கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட, இலக்கம் 25 கொண்ட க.கி.வரைபடத்தில் துண்டு இலக்கம் 352 கொண்ட காணித் துண்டின் எல்லைகள்:

**துண்டு இல. 352 - காணியின் பெயர்: ரஜ்ஜம்மன தோட்டம்; ஆரம்ப உரிமை கோருவோர்: அரசு; விஸ்தீரணம்: 0.1700 ஹெக்டயார்.**

வடக்கு: துண்டு இல. 353; கிழக்கு: துண்டு இல. 353; தெற்கு: துண்டு இல. 353; மேற்கு: துண்டு இல. 353.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு மாத்தளை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 13 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கே. பி. கே. எல். பி. மதுவந்தி,
பிரதேச செயலாளர்,
மாத்தளை.

பிரதேச செயலகம்,
மாத்தளை,
2017, நவெம்பர் 20.

12 - 200

1A - G 26667 - 14 (2017/11) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.